DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 200/2022**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செந்தில்குமார் | Caste | : | |
| Father Name | : | கருணாநிதி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **05.03.2026.**

**PW - 4**

**(1 முதல் 16 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், திருவானைக்கோவில் ஒத்த தெருவில் குடியிருக்கிறேன். ஆட்டோ ஓட்டுனராக உள்ளேன். அசா.1 விஜயராஜ், அசா.2 முருகானந்தம், அசா.3 உத்தமன் ஆகியோரை தெரியும். சாட்சி மகேஷ்குமாரை தெரியும். சாட்சிகள் செல்வராஜ், பரமசிவம் ஆகியோரை தெரியாது. ஆஜர் 1 முதல் 16 எதிரிகள் யாரையுமே எனக்கு தெரியாது. 09.08.2020 அன்று இரவு 10.30 மணியளவில் அசா.1 விஜயராஜை யாரோ அடித்துவிட்டதாகவும், அவர் வீட்டிலிருப்பதாகவும் சொன்னார்கள். அவரை நான் அவரது வீட்டிலிருந்து அழைத்துக் கொண்டு ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். அசா.1 ஐ யார் எங்கு வைத்து எதனால் அடித்தார்கள் என்று தெரியாது. வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

*(சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)*

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அதில் எங்கள் தெரு பசங்களுக்கும், நடு கொண்டையம்பேட்டை தெரு பசங்களுக்கும் ஏற்கனவே பிரச்சனையிருந்தது என்றும், பேச்சுவார்த்தை இல்லை என்றும், ஆஜர் எதிரிகள் அனைவரும் நடு கொண்டையம்பேட்டையை சேர்ந்தவர்கள் என்றும், 09.08.2020 அன்று இரவு 10.00 மணிக்கு அசா.1–ம், மகேசும் சேர்ந்து மகேசின் அப்பாவிற்கு மாத்திரை வாங்க இருசக்கர வாகனத்தில் போனபோது, அய்யன்வெட்டி தெருவில் ஐஸ்வர்யம் அப்பார்ட்மெண்ட் அருகே ஆஜர் எதிரிகள் அசா.1–யும், மகேசையும் கெட்ட வார்த்தையால் திட்டி, சவுக்கு கட்டானாலும், கைகளாலும் அடித்து தாக்கி கொலை முயற்சி செய்ததாக சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரிகள்தான் மகேஷை தாக்கி, அசா.1 வண்டியையும் அடித்து சேதப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு, வழக்கிலிருந்து எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.